[1989 ஏப்ரல் 29

புதுப்பேட்டை கிராமத்து உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக்குதல்.

150—(*வினா எண். 502) திரு. ஆர். மகேந்திரன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாட்ராம்பள்ளி தொகுதியில் புதுப்பேட்டை கிராமத்தில் உள்ள அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் : தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) : 1989-90-ஆம் கல்வி ஆண்டில் புதுப்பேட்டை அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக உயர்த்துவதற்கு வேலூர் முதன்மைக் கல்வி அலுவலரிடம் இருந்து உரிய கருத்துருக்கள் பள்ளிக் கல்வி இயக்குநரால் பெறப்பட்டுள்ளன. அக்கருத்துருக்கள் அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்ட பின்னர் அவற்றைப் பரிசீலித்து நிதி நிலைக்கேற்ப உரிய ஆணை வெளியிடப்படும்.

சென்னை நகரப் பேருந்துகளை அதிகப்படுத்துதல்.

151—(*வினா எண். 241) திரு. சி. கோவிந்தராஜன் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னை நகரப் பேருந்துகளில் பிரயாணிகளின் நெரிசலைத் தவிர்க்கும் பொருட்டு மேலும் அதிகப் பேருந்துகள் விடும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவர் அவர்களே, ஆம். ஆடுத்த ஐந்து ஆண்டிற்கு உலக வங்கியின் உதவியுடன் ஆண்டுதோறும் 50 பேருந்துகள் அதிகரிக்கத் திட்டம் வகுக்கப்பட்டு உள்ளது. அத்துடன் பழைய பேருந்துகளுக்குப் பதிலாக ஆண்டுதோறும் 250 புதிய பேருந்துகள் இயக்கத் திட்டம் உள்ளது.

திரு. சி. கோவிந்தராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது, 'வி' சர்வீஸ், 'வீவீ' சர்வீஸ், 'ஜே' சர்வீஸ் 'ஜேஜே' சர்வீஸ் என்று புதிதாக விரைவு வண்டிகள் விடப்பட்ட பிறகு ஏற்கெனவே ஓடிவந்த 300 பஸ்கள் ஷெட்டுகளிலே நிறுத்தப்பட்டிருப்பது அரசுக்குத் தெரியுமா? இவைகளை ஓட்டச் செய்தால் ஓரளவிற்குத் தற்காலிகமாக இந்த நெரிசலைக் குறைக்கலாம். நீங்கள் சொல்லக்கூடிய திட்டத்தை விட இது நல்லதாக இருக்கும் என்பது என்னுடைய கருத்து. அந்த அடிப்படையிலே அதை ஏற்பாடு செய்வதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

1989 ஏப்ரல் 29]

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஓர்க் ஷாப்பிலே இருக்கக்கூடிய பழுதடைந்த பஸ்களினுடைய எண்ணிக்கையைப் பற்றி எனக்குத் தகவல் இல்லை. இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்து இருக்கின்ற தகவலின் அடிப்படையில் அதைப்பற்றி விசாரித்து அவைகளில் இயங்க வைக்கக் கூடிய பஸ்களை இயங்க வைப்பதற்கான நடவடிக்கையை மேற்கொள்ளலாம். பொதுவாக எவ்வளவு பஸ்களை நாம் அதிகப்படுத்தினாலும் போக்குவரத்து நெரிசல் என்பது காலையிலே $8\frac{1}{2}$ மணியிலேயிருந்து $10\frac{1}{2}$ மணி வரையிலும், அதேமாதிரி மாலை நேரத்திலே 3 மணியிலிருந்து 5 மணி வரையிலும் ஏராளமாக இருக்கிறது. அது பேருந்துகளினாலே மட்டுமல்ல, பொதுவாகவே பாதையிலே செல்லக்கூடிய கட்டை வண்டிகள், அதேமாதிரி இன்னும் பல்வேறு வகையான கை வண்டிகள், டிராலி, வேன், லாரி போன்றவைகளால் கூட நெரிசல் ஏற்படுகிறது. அதிகப்படியான பேருந்துகளைப் போட்டாலும் அவைகள் நேரத்துக்கு விரைந்து செல்ல முடியாத நிலைமைகளெல்லாம் இருக்கின்றன. எனவே நகரத்தைப் பொறுத்த வரையில் போக்குவரத்தை ஒழுங்குபடுத்த வேண்டிய சூழ்நிலையிலே நாம் இருந்து கொண்டிருக்கிறோம். பள்ளிகளினுடைய நேரத்தைக்கூட மாற்றி அமைக்கலாம். பள்ளி நேரங்களிலே மட்டும் 3 இலட்சம் பயணிகள் கூடுதலாக, மாநகரத்தைப் பொறுத்த அளவிலே பயணம் செய்ய வேண்டிய நிலைமை இருக்கிறது. இவைகளையெல்லாம் ஆராய்ந்து பார்த்து ஒவ்வொரு வழித்தடத்திலேயும் கூடுதலான பேருந்துகளை விடுகின்ற நேரத்தில் எப்படிப்பட்ட சூழ்நிலையிலே அந்தப் பேருந்துகளை இயக்கலாம் அல்லது நேரங்களை மாற்றி இயக்கலாம் என்பதைப்பற்றி—ஒட்டுமொத்தமான பல்லவனுடைய பஸ்கள்ஓடக் கூடிய பகுதிகளில் இதைப்பற்றியெல்லாம்—பரிசீலனை செய்ய வேண்டிய நிலைமையில் இன்றைக்கு இருந்து கொண்டிருக்கிறோம்.

(முற்பகல் 9-10)

திரு. சி. கோவிந்தராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போக்குவரத்தை ஒழுங்குபடுத்த வேண்டுமென்பது அவசியம். ஆனால் அதேநேரத்தில் சென்னை நகரில் பஸ்ஸில் பயணம் செய்வது கொடிய காரியமாக இருக்கிறது. 'வி', 'ஜே' சர்வீஸ்களில் கூட ஏறமுடியாத நிலைமை இருக்கிறது. அதற்கு முக்கியமான காரணம் 'வி' 'ஜே' சர்வீஸ்களை அதிக 'சிங்கிள்ஸ்' விடுவதால் அதிகமான ஆதாயம் வருகிறது; ஆகவே, பழைய வண்டிகளை ஓட்ட வேண்டாம் என்று சொல்லியிருக்கிறார்கள். இந்த வண்டிகள் எல்லா ஸ்டாப்புகளிலும் நிற்பதில்லை. அதனால் நெரிசல் அதிகமாகிறது. இதை எல்லாம் கருத்தில் கொண்டு ஆணை பிறப்பிக்கப்படுமா ? குறிப்பாக பல்லவன் பேருந்துகளை இப்படிப்பட்ட 'வி', ஜே' சர்வீஸ்களாக விடும்போது அல்லது அறிமுகப்படுத்தும்போது பழைய வண்டிகளை நிறுத்தக்கூடாது; அவைகளையும் ஓட்டவேண்டும் என்று அணையிடப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே, கூட்ட நெரிசலைத் தவிர்க்க வேண்டுமென்ற எண்ணத்தைக் கருத்தாகக் கொண்டுதான் 'வி', 'ஜே' சர்வீஸ்கள் இயங்கிக் கொண்டிருக்கின்றன. இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவிந்தராஜன் அவர்கள் தெரிவித்ததைப்போல 'வி', 'ஜே' சர்வீஸ்களை விடும்போது ஏற்கெனவே எல்லா பஸ் ஸ்டாப்புகளிலும் நிற்கக்கூடிய பேருந்துகளும் குறைக்கப்படாமல் அல்லது நீக்கப்படாமல் நிச்சயமாக பாதுகாத்துக்கொள்ளப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர்கள் நேரத்தைக் கருதி, வினாக்களைச் சுருக்கமாகக் கேட்க வேண்டும்.

திரு. என். கணபதி : தலைவரவர்களே, மக்கள் தொகைப் பெருக்கத்திற்கு ஏற்ப ஆண்டுக்கு 50 பேருந்துகள் எவ்வளவு தூரம் தேவையைப் பூர்த்தி செய்யுமென்பது தெரியவில்லை. ஆனால் சென்னை நகரில் சாலைகளை விரிவுபடுத்தி 'ட்ரிப்' நேரத்தைக் குறைத்தால் நெரிசல் குறையும். எனவே, சாலைகளைச் சீர்படுத்தி, விரிவுபடுத்தும் திட்டம் அரசிடம் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே, சாலைகளையும் ஒழுங்குபடுத்த வேண்டும்; நெரிசலையும் குறைக்க வேண்டும். நெரிசல் அதிகமாக இருப்பதற்கு இன்னொரு முக்கியமான காரணம் மின்சார இரயிலில் பயணம் செய்யும் பயணிகளின் எண்ணிக்கை நாளுக்குநாள் குறைந்து வருகிறது. அதற்குக் காரணம் என்னவென்றால் உதாரணத்திற்கு ஒன்றைச் சொல்கிறேன். தாம்பரத்திலிருந்து கோட்டைக்கு வரவேண்டுமானால் இரயில் கட்டணம் 3 ரூபாய். ஆனால் பேருந்தில் வருவதாக இருந்தால் ரூ. 1.55 தான் கட்டணம். இப்போது கட்டணம் குறைவாக இருப்பதை ஒரு காரணமாகக் காட்டி, அதனால் கட்டணத்தை உயர்த்திவிடுவார்களோ என்று மாண்புமிகு உறுப்பினர்கள் கேட்கவேண்டிய அவசியம் இல்லை.

திரு. உ. ரா. வரதராசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை நகரில் வீட்டுவாடகை அதிகம் அல்லது வீட்டுவசதி இல்லாத காரணத்தால் புறநகர்ப்பகுதிகளில் புதிய குடியிருப்புகள் நெடுந்தொலைவில் உருவாகின்றன. அந்தப் புறநகர்ப் பகுதிகளை சென்னை நகருடன் இணைப்பதற்கான வழித்தடங்களில் அதிகமாகப் பேருந்துகள் விடப்படுமா, அதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே, நடவடிக்கை எடுக்கலாம்.

1989 ஏப்ரல் 29]

திரு. மு. க. ஸ்டாலின் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மகளிர்க்கு மட்டும் விடப்படும் பேருந்துகளை அதிகப் படுத்தும் திட்டம் அரசுக்கு உண்டா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே, ஏற்கெனவே மகளிர்க்கு மட்டும் விடப்பட்டிருக்கிற பேருந்துகளை அதிகப்படுத்த வேண்டிய நிலைமை இருக்குமானால், தேவைப் பட்டால் அந்தப் பேருந்துகளின் எண்ணிக்கையை போக்கு வரத்துக் கழகம் அதிகப்படுத்தும்.

திரு. எஸ். டி. உகம்சந்த் : தலைவரவர்களே, புதிய பேருந்து களை வாங்குவதற்கு உலக வங்கியிடம் கடன் பெறுவதற்கு வழிவகை செய்யப்பட்டிருக்கிறது என்று சொல்லியிருக்கிறார் கள். அதற்கு என்ன நிபந்தனைகள் போட்டிருக்கிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன். அதோடு நெரிசலைப் போக்க பள்ளிக்கூடங்கள் தொடங்கும் நேரத்தை மாற்றியமைக்க அரசு முன்வருமா என்றும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே, உலக வங்கியிடமிருந்து பெறக்கூடிய கடன் முழுமையாக நம் முடைய பல்லவன் போக்குவரத்துக் கழக எல்லைக்குள் பேருந்து கள் வாங்கி விடுவதற்கு பயன்படுத்தப்பட வேண்டும். காலா காலத்தில் திருப்பி வட்டியோடு கட்ட வேண்டும். இவைகள்தான் அவர்கள் விதித்திருக்கிற நிபந்தனைகள். (குறுக்கீடு) நெரிசலைத் தவிர்க்க பள்ளிக்கூடங்களுடைய நேரம் காலை 9-00 மணி அல்லது 10-00 மணிக்குத் தொடங்குவதை மாற்றி காலை 8-00 மணி அல்லது 7-30 மணி என்று வைத்தால் கிட்டத்தட்ட 3 இலட்சம் பயணிகள் பயணம் செய்யும் நெருக்கடியை நம்மால் தவிர்க்க முடியும். அதுபற்றி கல்வித் துறையைக் கலந்து, எதிர் காலத்திலே ஆலோசிக்கலாம்.

அடையாற்றில் பாலம்.

152—(*வினா எண். 246) : திரு. மீ. அ. வைத்தியலிங்கம் : மாண்புமிகு போக்குவரத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

அடையாற்றில் அனகாபுத்தூர் பேரூராட்சியையும், குன் றத்தூர் பேரூராட்சியையும் இணைக்கும் பாலம் கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவர் அவர்களே,

இல்லை.